செய்தி வெளியீடு எண்: 552 நாள்: 28.8.2009

# செய்திக் குறிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் மேலான வழிகாட்டுதலின்படியும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு ஓராண்டாகச் சீரும் சிறப்புடனும் கொண்டாடி வருகிறது. நூற்றாண்டு விழா நிறைவு நிகழ்ச்சியின் போது அண்ணா நூற்றாண்டு விழாமலர் வெளியிடத் திட்டமிடப்பட்டு மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களைத் தலைவராகவும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களைத் துணைத்தலைவராகவும் கொண்டு மலர்க்குழு அமைக்கப்பட்டு நூற்றாண்டு விழாமலர் தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னைத் தரமணியில் உள்ள உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இதற்கென இயங்கும் அலுவலகத்தில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் மலர்க்குழு உறுப்பினர்-செயலருமான முனைவர் ம.இராசேந்திரன் அவர்களின் மேற்பார்வையில் அறிஞர்களும் அலுவலர்களும் மலர் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (28.8.2009) உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இரண்டாவது முறையாக வருகை தந்து, நடைபெற்று வரும் விழாமலர்ப் பணிகளை ஆய்வு செய்தார்கள். தமிழ்ப் பல்கைலக்கழகத் துணைவேந்தரும் மலர்க்குழு உறுப்பினர்-செயலருமான முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் நடைபெற்று வரும் விழா மலர்ப்பணிகள் பற்றிய விவரங்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ் , இ.ஆ.ப., தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறைத் தலைவர் முனைவர்.மு.இராமசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக் கண்ணன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை இயக்குநர் திரு.வீரபாகு மற்றும் அறிஞர் பெருமக்களும் அலுவலர்களும் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9